[திரு. க. சுப்பு] [1979 மார்ச் 9

அல்ல ; அரசாங்க அலுவலகங்களிலே உள்ள சங்கத்தில் ஒருவர் வெற்றி பெற்றால் அமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கேட்காமல் வளவுக்குள்ளேயோ அல்லது வளவுக்கு வெளியிலேயோ அவ்வாறு கலந்து கொள்வது நல்லதல்ல. அன்பில் இருக்கிற போது இப்படி நடக்கவில்லை. ஆண்டு விழா போன்றவைகளுக்கு அமைச்சர்கள் போக வேண்டியதுதான். ஆனால் இந்த விழா விலே நீங்கள் . . .

3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) விவசாயிகள் பிரச்சினை குறித்து :

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய முன்தினம் முதுகுளத்தூர் நிகழ்ச்சியைப் பற்றி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அதை வேண்டுமானால், இன்றைக்கு கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுத்துக் கொண்டிருக்கலாம். ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், இப்போது எனக்கு தந்தி அடிக்கப்பட்டு, ஆட்களும் வந்திருக்கிறார்கள். போலீஸ் ஸ்டேஷனை விவசாயிகள் முற்றுகை யிடக் கூடிய அளவுக்கு, அங்கே 300 விவசாயிகள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட முக்கியமான நிகழ்ச்சியை எடுத்துக் கொண்டால் நல்லது . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்படிப்பட்ட ஒரு புரோசிஜர் தேவையில்லை. வேண்டாம். தயவு செய்து உட்காருங்கள். அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் விவசாயிகள் பிரச்னை சம்பந்தமாக, அவை யிலே 82-வது விதியின் கீழ் ஒரு அறிக்கை தரப்படுவதாகக் கூறப்பட்டது. இன்னும் அந்த அறிக்கை இங்கே தரப்படவில்லை; எப்போது தரப்படும் என்று அறிவிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கூத்தக்குடி சண்முகம் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்த விவசாயிகள் பிரச்னைக்கும், அதற்கும் சம்பந்தமில்லை என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். சேலம், கோயமுத்தூர் ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் மின் துண் டிப்பு நடைபெற்றது. அதைப் பற்றி இன்றைய தினம் பேசி முடிவெடுத்து, அறிக்கை அளிப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர் கள் நேற்றைய தினம் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்

திலும், விவசாயிகள் சங்கத் தலைவர்கள் கூட்டத்திலும், குறிப்பிட்டார்கள். அது குறித்து விரைவிலேயே முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே முதுகுளத்தூரிலே 300 விவசாயிகள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி வேண்டாம். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் பேசும் போது, தமிழகம் பூராவும் மின் துண்டிப்பு செய்யப்பட்டதன் காரணமாக பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலே, இன்றைக்கு காலையிலே மீண்டும் மின் இணைப்பு கொடுப்பது பற்றி ஒரு அறிவிப்பு அறிவிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த அறிவிப்பு இதுவரை அறிவிக்கப்படவில்லை. அது எப்போது அறிவிக்கப்படும் ? இன்றைக்கா, அல்லது நாளைக்கா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்று விவசாயிகள் சம்பந்தமான கூட்டம் நடந்த உடனே சிம்கோ சம்பந்தமான கூட்டம் ஆரம்பித்தது. அதுவே நேற்று முழுவதும் சரியாகி விட்டது. இன்றைக்கு சட்டமன்றத்தில தொடர்ந்து இந்தப் பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சட்டமன்றம் நடக்கிறபோது எப்படியாவது கொண்டு வந்து அறிவித்து விடலாம் என்று அந்த வேலையில் இருக்கிறோம்.

(திரு. சோ. அழகர்சாமி எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி விட்டார்கள். அடுத்த பிரச்னைக்குப் போகலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பாயின்ட் ஆப் ஆர்டர் . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்னை எழுப்புவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. இங்கு அவை நடக்கும் போது நடைமுறையில் ஏதாவது தவறுகள் ஏற்பட்டிருக்குமானால் அதை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி சுட்டிக் காட்டலாம். வெளியிலே இருக்கும் பிரச்னைகளைக் குறித்துச் சொல்வதற்கு ஒழுங்குப் பிரச்னை எழுப்ப முடியாது.

[1979 மார்ச் 9

திரு. சோ. அழகர்சாமி : விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள் . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். தாங்கள் அந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசி அமைச்சர் பதில் சொல்லி விட்டார். அனுபவம் உள்ளவர்கள், பெரியவர்கள் சபையை ஒழுங்காக நடத்த உதவியாக இருக்க வேண்டும்.

(திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தக்குடி சண்முகம் எழுந்து நின்றுகொண்டே பேசத் துவங்கினர்).

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் உணர்ச்சிவசப்பட வேண்டாம். இன்றைக்குத்தான் அறிவிப்பதாக இருக்கிறோம். ஆகையால் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

)அ) அடகு கடைக்காரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

*THE HON. THIRU K. NARAYANASWMY : Mr. Deputy Speaker, Sir, I beg to move that the Tamil Nadu Pawnbrokers (Amendment) Bill, 1979 @ (L.A. Bill No. 12 of 1979) be taken into consideration.

By Section 12 A of the Tamil Nadu Pawnbrokers Act, 1943, a amended, the sale by pawnbrokers of the pledges pawned with them had been barred upto and inclusive of the 15th January 1979. Government decided that this ban should be extended for a further period of two months to enable the pawners who had not redeemed their pledges by 15th January 1979, to have some more time to pay their dues in instal ments and to have their pledges redeemed. Accordingly, the Tamil Nadu Pawnbrokers (Amendment) Ordinance, 1979 (Tamil Nadu Ordinance 3 of 1979) was promulgated by the Governor. The present Bill before the House is to replace the above Ordinance. Government have examined the need for further extension of this ban and decided to extend the ban for three more months from 15th March 1979, i.e., up to and tnclusive of 15th June 1979. Necessary provision has been made to provide for this also in the Bill.

Sir, I commend the motion for the acceptance of the House.

@ 1979, பிப்ரவரி 22 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப்பட்டுள்ளது.